சுருக்கம்

கல்லூரிக் கல்வி – 2022–23–ஆம் கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கூடுதல் தேவை உள்ள பாடப்பிரிவுகளில் கூடுதலாக மாணாக்கர்களை சேர்ப்பதற்கு அனுமதி அளித்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

உயர்கல்வி (ஜி1) துறை

அரசாணை (வாலாயம்) எண்.213 நாள் 01.09.2022.

ஸ்ரீ சுபகிருது வருடம், ஆவணி – 16,

திருவள்ளுவர் ஆண்டு, 2053.

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (வாலாயம்) எண்.141, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 06.09.2022.
2. கல்லூரிக் கல்வி இயக்குநர் கடித ந.க.எண்.33832/எம்2/2022, நாள் 22.08.2022.

*****

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2021–22–ஆம் கல்வியாண்டில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணாக்கர்கள் சேர்க்கைக்கு அதிகளவில் விண்ணப்பங்கள் பெறப்பட்ட நிலையில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கலை பாடப்பிரிவுகளுக்கு 25% கூடுதலாகவும் மற்றும் அறிவியல் பாடப்பிரிவுகளுக்கு ஆய்வக வசதிக்கு ஏற்ப 25% கூடுதலாகவும், மாணாக்கர்களை சேர்ப்பதற்கு அனுமதி அளித்தும், இக்கூடுதல் மாணாக்கர்கள் சேர்க்கைக்கு, சார்ந்த பல்கலைக்கழகங்களின் அனுமதி பெற வேண்டும் எனவும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு அருகாமையிலுள்ள / சுற்றியுள்ள பெரும்பாலான கிராமங்களிலிருந்தும், நகராட்சியிலிருந்தும், பிற்படுத்தப்பட்ட பழங்குடியின மாணவ / மாணவிகள் அரசு கல்லூரிகளில் அதிகளவில் கல்வி பயில விண்ணப்பித்துள்ளனர் என்றும், இம்மாணவ/ மாணவிகள் அதிக கல்விக் கட்டணம் செலுத்தி தனியார் மற்றும் சுயநிதி கல்லூரிகளில் கல்வி பயில மிகவும் சிரமப்படுகின்றனர் என்றும், அரசு கல்லூரிகளில் 2022–23–ஆம் கல்வியாண்டிற்கு மாணவர் சேர்க்கைக்கு அதிக அளவில் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது என்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார். எனவே, கடந்த

கல்வியாண்டைப் (2021-22) போல் இவ்வாண்டும் விண்ணப்பங்கள் அதிகமாக பெறப்பட்டுள்ளமையால், மாணவர்களின் நலன் கருதி 2022-23-ஆம் கல்வியாண்டில் கூடுதல் மாணவர் சேர்க்கைக்கு கலைப் பாடப்பிரிவுகளில் 25% கூடுதலாகவும், அறிவியல் பாடப் பிரிவுகளுக்கு ஆய்வக வசதிக்கேற்ப 25% கூடுதலாகவும், மாணாக்கர்களை சேர்ப்பதற்கு அனுமதி வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலித்த அரசு, தற்போது பன்னிரெண்டாம் வகுப்பு மாணாக்கர்கள் தேர்ச்சி விகிதம் சீராக உள்ள நிலையில், 2021-22-ஆம் கல்வியாண்டிற்கு முன்னர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் வழங்கப்பட்டு வந்ததைப் போன்று, 2022-23-ஆம் கல்வியாண்டில் கலை பாடப்பிரிவுகளுக்கு 20% கூடுதலாகவும், அறிவியல் பாடப்பிரிவுகளுக்கு ஆய்வக வசதிக்கு ஏற்ப 20% கூடுதலாகவும் மாணாக்கர்களை சேர்ப்பதற்கு அனுமதியும், இக்கூடுதல் மாணக்கர்களின் சேர்க்கைக்கு கல்லூரிகள் சார்ந்த பல்கலைக்கழகங்களின் அனுமதி பெற வேண்டும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா.கார்த்திகேயன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை – 15.
அனைத்து மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள்
(கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக).
முதல்வர், அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்
(கல்லூரி கல்வி இயக்குநர் வழியாக).
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சரின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை – 9.
அரசு முதன்மைச் செயலாளரின் நேர்முக உதவியாளர்,
உயர்கல்வித்துறை, சென்னை – 9.
இ.கோ./ உதிரி

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது//

01/09/2022
பிரிவு அலுவலர்